# வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No. 542/2021
## வழக்கு சாட்சி PW-3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இராஜேந்திரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | லட்சுமணன் | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | அச்சன்புதூர் | வயது | : | 59 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 10.03.2026.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது அச்சன்புதூர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.12.2012 ம் தேதியில் நான் செங்கோட்டை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது, அன்றைய தினம் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகையா, தலைமைக்காவலர்கள் ஹரிஹரன், சுதாகரன் ஆகியோர்களுடன் நானும் ரோந்து செய்து, இரவு 20.00 மணியளவில் செங்கோட்டை பஸ்ஸ்டாண்ட் அருகிலுள்ள பிள்ளையார் கோவில் பக்கம் வரும்போது அங்கு நின்றிருந்த எதிரிகள் 3 பேரும் எங்களை கண்டதும் ஓட முயற்சித்தார்கள். நாங்கள் மடக்கி பிடித்து விசாரிக்க அதில் இளங்கோ என்பவர் கருப்பு பையை பின்னால் மறைத்து வைத்திருந்ததை பரிசோதனை செய்தபோது, அதில் கள்ளநோட்டுக்கள் ரூ.1000/- நோட்டுக்கள் 740 எண்ணிக்கையிலும், ரூ.500/- நோட்டுக்கள் எத்தனை எண்ணிக்கை இருந்தது என்று எனக்கு ஞாபகமில்லை., ரூ.100/-

நோட்டுக்கள் 296 எண்ணிக்கையிலும் இருந்தது. அந்த நோட்டுக்கள் கள்ளநோட்டுக்கள் என எங்களுக்கு சந்தேகம் வந்தது.

கள்ளநோட்டுக்கள் வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி சொத்துக்களையும், கருப்பு பை ஒன்று ஆகியவற்றை கைப்பற்றி எதிரிகள் 3 பேர்களையும் கைது செய்து அத்தாட்சி பிறப்பித்தும், அங்கு இருந்தவர்கள் யாரும் அதில் கையொப்பமிட முன்வராததினால் போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே கையொப்பமிட்டு, இரவு 22.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய பொறுப்பு சிறப்பு சார்பு ஆய்வாளர் முத்துச்சிவன் என்பவரிடம் சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகையா தனிஅறிக்கை மூலம் ஒப்படைத்தார். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.11 11:32:45 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 542/2021**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஹரிஹரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | செங்கோட்டை | வயது | : | 54 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 10.03.2026.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆய்க்குடி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.12.2012 ம் தேதியில் நான் செங்கோட்டை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது, அன்றைய தினம் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகையா, தலைமைக்காவலர்கள் இராஜேந்திரன், முருகன், சுதாகரன் ஆகியோர்களுடன் நானும் ரோந்து செய்து, இரவு 20.00 மணியளவில் செங்கோட்டை பஸ்ஸ்டாண்ட் அருகிலுள்ள பிள்ளையார் கோவில் பக்கம் வரும்போது அங்கு நின்றிருந்த எதிரிகள் 3 பேரும் எங்களை கண்டதும் ஓட முயற்சித்தார்கள். நாங்கள் மடக்கி பிடித்து விசாரிக்க அதில் இளங்கோ என்பவர் கருப்பு பையை பின்னால் மறைத்து வைத்திருந்ததை பரிசோதனை செய்தபோது, அதில் கள்ளநோட்டுக்கள் ரூ.1000/- நோட்டுக்கள் 740 எண்ணிக்கையிலும், ரூ.500/- நோட்டுக்கள்

740 எண்ணிக்கையிலும் இருந்தது ரூ.100/- நோட்டுக்கள் 500 எண்ணிக்கைக்கு மேல் இருந்தது.

கள்ளநோட்டுக்கள் வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி சொத்துக்களையும், கருப்பு பை ஒன்று ஆகியவற்றை கைப்பற்றி எதிரிகள் 3 பேர்களையும் கைது செய்து அத்தாட்சி பிறப்பித்தும், அங்கு இருந்தவர்கள் யாரும் அதில் கையொப்பமிட முன்வராததினால் போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே கையொப்பமிட்டு, இரவு 22.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய பொறுப்பு சிறப்பு சார்பு ஆய்வாளர் முத்துச்சிவன் என்பவரிடம் சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகையா தனிஅறிக்கை மூலம் ஒப்படைத்தார். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.11 11:32:52 +0530